**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC No.393/2021**
**Deposition of witness for prosecution –DW–1**

| | | |
|---|---|---|
| Name | : | மேனகா |
| Husband Name | : | நீதிமணி |
| Village | : | சேலம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 07th day of October 2025.

**குறுக்கு விசாரணை:**

எனது கணவர் பெயர் நீதிமணி. எனது கணவர் Bullion fintech LLP என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார். மேற்படி நிறுவனத்தின் மூலம் இராமநாதபுரம், காரைக்குடி முதுகுளத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள பொதுமக்களை உறுப்பினராக சேர்த்தார் என்றால் சரிதான். மேற்படி நிறவனத்தில்நானும் பங்குதாரர் என்றால் சரிதான். மேற்ப்டி நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களை பற்றிய விவரம் எனக்கு தெரியாது பணம் வசூல் செய்த விவரம் தெரியாது என்று வழ்க்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கும் தெரியும் என்றும் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனம் அண்ணாசாலை மவுண்ட் சேம்பர் வைத்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை நடத்தி வருமபோது நானும் எனது கணவரும் 528, டாக்டர் கமலம் மனோ அப்பார்மெண்ட் டிடிகே சாலை ஆள்வார் பேட்டையில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனம் உறுப்பினர்களுக்கு லாபத்தொகையை கொடுக்காததால் அதில் உள்ள உறுப்பினர் ஒருவர் இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் புகார்

கொடுக்கப்பட்டு மேற்படி புகாரின் அடிப்படையில் எனது கணவர் மீதும் என் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சரியான கணக்குகளை உறுப்பினர்கள் கொடுக்காததால் அதனால் ஏற்பட்ட பிரச்சனையால் என் மீதும் என் கணவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. உறுப்பினர்களிடம் இரு்து பணம் வாங்கும்போது உறுப்பினர்களுக்கு அசூரன்ஸ்காக காசோலை கம்பெனியில் இருந்து வழங்கப்படுவது என்றால் சரிதான். மேற்படி காசோலையை கையெழுத்திட்டு நிரப்பப்படாத காசோலையை ஆனந்த் என்பவருக்கு அனுப்புவோம். ஆனந்த் என்பவர் வாங்கிய காசோலைகளை அவருடைய உறுப்பினர்கள் அனைவருக்கும் கொடுப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எனது கணவர் நிறுவனத்திடம் இருந்து அருண்குமார் என்வருக்கு காசோலை வழங்கியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது கணவரும் நானும் காசோலையை அருண்குமாரிடம் கொடுத்தோம் மேற்படி காசோலையை வைத்து சமூகம் நீதிமன்றத்தில் STC 06/2021 வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்1 நீதிமன்றத்தில் இருந்து மாறுதலாகி மதுரை பொருளாதார குற்றபிரிவு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான். அது போல இந்த வழக்கின் புகார்தாருக்கு காசோலை வழங்கிவிட்டு தற்போது வழங்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். நிறுவனம் வைத்து நடத்தும்போதே சென்னையில் உள்ள அலுவலகத்திற்கும் குடியிருந்து வந்த வீட்டிற்கும் சேலத்திற்கும் சென்று வருவோம் என்றால் நான் சென்னையில் மட்டும் தான் இருந்தேன். 16.07.2020ம் தேதிக்கு பிறகு நான் சேலத்தில் இருந்தேன். எனது கணவர் கைது செய்யப்பட்டு செங்கல்பட்டு நீதிமன்றத்தில் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். மேற்படி எனது கணவர் கையெழுத்து செய்யும்போது சென்னை அபார்மெண்டிற்கு சென்று வருவோம் என்றால் செங்கல் பட்டில் எனது கணவர் மட்டும் தங்கி கையெழுத்து செய்து வந்தார்என்றால் சரிதான். மேற்படி எனது கணவர் சென்னையில் உள்ள அபார்மெண்டில் இருந்து தான் கையெழுத்து செய்து வந்தார் என்றும் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பத்திற்கு பிறகு மேற்படி நானும்எனது கணவரும் சென்னையைவிட்டு சேலத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். ரிப்ளை நோட்டிஸ் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி சென்னையில் நான் தங்கியிருக்கும் சமயத்தில் தான் எனது

கணவரும் நானும் புகார்தாருக்கு காசோலை வழங்கினோம் என்றும் தற்போது அதை மறைப்பதற்காக அந்த அபார்மெண்டை காலி செய்து விட்டதாக பொய்யாக ஆவணங்களை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டில்இருந்து காலி செய்ததாக வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் குறிப்பிடபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நானும் எனது கணவரும் குடியிருந்ததால் பதில் அறிவிப்பில் குறிப்பிடாமல் அந்த வீட்டை விட்டு காலி செய்தோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. செங்கல்பட்டில் இருந்து எங்கள் அபார்மெண்ட் செல்வதற்கு முக்கால் மணி நேரம் ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது கணவரும் நிறுவனம் வைத்து நடத்தி அந்த சமயத்தில் உறுப்பினர்களுக்கு காசோலை வழங்கிவிட்டு தற்போது அந்த முகவரியில் காசோலை வழங்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எனது கணவர் மோசடி வழக்கில் சேலத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி நானும் எனது கணவரும் பணத்திற்கு ஈடாக காசோலை வழங்கிவிட்டு தற்போது காசோலை வழங்கவில்லை என்றும் மேற்படி புகார்தாரரை தெரியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. நானும் எனது கணவரும் டிடிகே கமலம் மனோ அபார்மெண்டில் வைத்து புகார்தாருக்கு காசோலை வழங்கிவிட்டு தற்போது வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.